UNIVERSITY HOSPITAL
General Sir John Kotelawala Defence University

# பல்கலைக்கழக வைத்தியசாலை
# ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

**பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழத்தில் பின்வரும் பதவிகளுக்காக தகுதிவாய்ந்த நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது:**
**(நிரந்தர அடிப்படை)**

## 1. வைத்திய நிபுணர்கள்

- தோல் மருத்துவ நிபுணர் (Consultant Dermatologist)
- கதிரியக்க சிகிச்சை நிபுணர் (Cosunltant Radiologist)
- இருதய சத்திரசிகிச்சை நிபுணர் (Consultant Cardiothoracic Surgeon)
- மூட்டு வாதவியல் நிபுணர் (Consultant Rheumatology)
- சிறுநீரகவியல் நிபுணர் (Consultant Nephrologist)

**தகைமைகள்**

i. 2018 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ் இலங்கை மருத்துவ சபையில் பதிவுசெய்யப்பட்ட/பதிவுசெய்யப்படக்கூடிய வைத்திய அதிகாரிகள் மற்றும் பல் வைத்தியர்கள்.

அல்லது

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழுப்பதிவுடைய மருத்துவ அதிகாரிகள்/ பல் மருத்துவர்கள்

அத்துடன்

iii. இலங்கை, கொழும்பு பல்கலைக் கழக மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவக சபையினால் சான்றிதழிக்கப்பட்டதாக குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்ற மருத்துவத்தில் டாக்டர் பட்டம்/ சத்திரசிகிச்சையில் டாக்டர் பட்டம் பெற்றிருத்தல் ( இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.10.11 திகதிய இல:1883/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்ட)

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) நன்னடத்தை தகுதிச் சான்றிதழ்

**சம்பள அளவுத்திட்டம்**

MC 1-2- ரூ. (91,645 – 12 x 2,700 - 124,045)
* வைத்திய நிபுணர்கள் MC 1-2 இன் முதலாம் படி ரூ.91,645/- நிலையில் வைக்கப்படுவர்.

**பொது நிபந்தனைகள்:**

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் எந்ததொரு பிரதேசத்திலும் அத்துடன் பல்கலைக்கழக வைத்தியசாலை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக பதவிக்குரித்தான கடமைகளை புரியும் பொருட்டு உடல் உள வலிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

v. வைத்திய நிபுணர்கள் மருத்துவம் மற்றும் இணைந்த சுகாதார அறிவியல் துறை பீடத்தின் இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களுக்கு டீன்கள் மற்றும் இணைந்த சுகாதார அறிவியல் துறைத் தலைவர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் கற்பித்து பயிற்சி அளிக்க வேண்டும்.

vi. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் அரசாங்க சேவையிலுள்ள வைத்திய நிபுணர்கள் ஒரு வருட (01) தகுதிகாண் காலத்திற்கு உட்படுதல் வேண்டும்.

vii. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியர் 10 % பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் பல்கலைக் கழகத்தினால் 15 % ம் , 03 % ஊழியர் நம்பிக்கை நிதிக்கு (ETF) பல்கலைக்கழகத்தினால் பங்களிப்புச் செய்யப்படும்.

viii. சரியாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் உறுதிப்படுத்தப்பட்டு இணைக்கப்பட்டு "நிறைவேற்றுப் பணிப்பாளர், பல்கலைக்கழக வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்லாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், வேரஹெர" என்ற முகவரிக்கு 2023.05.29 க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பித்த பதவியை கடித உறையின் இடதுபக்க மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

ix. எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுத்து பட்டியலிடுவதற்கான உரிமையை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

x. சரியாக பூரணப்படுத்தப்படாத அல்லது காலதாமதமாகி அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிடப்பட்டதற்கிணங்க தயாரித்து அனுப்பாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

xi. விண்ணப்ப படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பின்வரும் வலையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (www.kdu.ac.lk) / தொ.பேசி இல. 011-2044555.